வாணியம்பாடியில் மேம்பாலம்.

*வினா எண் 493—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர்-வேலூர் நெடுஞ்சாலையில் வாணியம்பாடி என்னுமிடத்தில் உள்ள ரயில்வே பாலத்தின் குறுக்கே ஒரு மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது இந்த திட்டம் ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-30)

திரு. ப. சுந்தரம் : தலைவரவர்களே, இந்த இடம் பெங்களூர், கோயம்புத்தூர் போகின்ற மெயின் சாலையாக உள்ளதால் அந்தச் சாலை இரயில்கள் குறுக்கே வருகின்ற இடமாக இருப்பதால் பஸ்கள் அரை மணி நேரம், முக்கால் மணி நேரம் தாமதமாகப் போகின்றன. ஆகவே, அந்த மேம்பாலத்தை உடனடியாகக் கட்டுவதற்கு உத்தரவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் அந்தப் பாலம் எப்படிப்பட்டது என்பதைக் சபையில் உள்ள எல்லோரும் அறிவார்கள். அந்தப் பாலத்தின் அருகில்தான் இப்பொழுது இரயில் விபத்து உண்டானது. எனவே, இது போன்ற விபத்துக்களைத் தடுப்பதற்கு உடனடியாக மேம்பாலம் கட்டுவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட விபத்து பாலம் இல்லாத காரணத்தால் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனாலும் கூட, அவசியத்தைக் கருதி, இந்தக் குறிப்பிடப்பட்டுள்ள இருப்புப் பாதை, தேசீய நெடுஞ்சாலை 46-ன் கீழ் கிருஷ்ணகிரி, இராணிப்பேட்டை சாலையில் கிலோமீட்டர் 50/4 வாணியம்பாடியில் குறுக்கிடுகிறது. இதற்காக மாற்றுவழிப் பாதையாகப் போடும் திட்டத்திற்காக நில உரிமைக்காக மட்டும் ரூ. 8,03,400 ஒதுக்கப்பட்டிருக்கிறது

ஆகவே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், இதற்காக மதிப்பீடு 40 இலட்சம் ரூபாய் என்றும் குறிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ப. சுந்தரம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிட்டது எப்பொழுது செயல் முறைக்கு வரும்? உடனடியாக வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் 1980-லிருந்து 1985 வரை. ஆகவே, மைய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம்; மைய அரசின் உதவி கிடைத்தவுடன் நடக்கும்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: தலைவரவர்களே, பெங்களூர், சென்னை இடையே இருக்கக் கூடிய அந்த நெடுஞ்சாலையில் லெவல் கிராசிங் கேட் இருப்பதால் போக்குவரத்து மிகவும் அதிகமாக பாதிக்கப்படுகிறது; பல விபத்துக்கள் நடக்கவும் இது ஏதுவாக இருக்கிறது. இதை விரைவுபடுத்தி, மத்திய அரசின் உதவியோடு ஆம்பூர் அருகிலேயும், வாணியம்பாடி அருகிலேயும் இரண்டு இடங்களிலேயும் அந்த லெவல் கிராசிங் அருகில் மேம்பாலம் கட்டும் திட்டத்தை அமல்படுத்த அரசு விரைவாக உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போலத்தான் இந்த மாநில அரசு மைய அரசுக்கு எழுதியிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளின் தரத்தை உயர்த்துதல்.

*வினா எண் 494:—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?—

(அ) பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) நகரத்தில் படிக்கும் மாணவனுக்கும், கிராமத்தில் படிக்கும் மாணவனுக்கும் படிப்பில், பொது அறிவில் மிகுந்த வித்தியாசம் உள்ளதைப் போக்க எடுத்துள்ள நடவடிக்கை யாது?